1974 சனவரி 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் தனி அட்மினிஸ்ட்ரேஷன் சர்விஸ் ஸுக்கு ஐ.ஏ.எஸ். போன்ற ஆபிசர்களை நியமனம் செய்கிற அமைப்பு முன்பு இருந்ததே, அதை மறு முறையும் கொண்டுவர இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படிச் செய்தால் அது நல்லதொரு அமைப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் வேலை முழுவதும் முடிவுற்றபிறகு வேண்டுமானால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருடைய யோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

District Training for Section Officers in Secretariat

* 92 *Q.*—THIRU R. R. MUNUSAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Secretariat Association has requested the Government to depute the Section Officers in the Secretariat for District Training; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர் 35 பேருக்கு ஓராண்டுக் காலத்திற்கு மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சியளிப்பதற்கான பயிற்சித் திட்டமொன்றைக் கொண்டு வந்து பொதுத் (பணிகள்-ஜே) துறையின் 16—11—1973 நாளிட்ட 2991-ஆம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சி பெற அனுப்பப்படும்போது, மாவட்ட வாரியாகவும் வட்ட வாரியாகவும் பணியாற்றவேண்டும். அவர்கள் எந்த எந்தத் துறையில் எப்படி எப்படிப் பணியாற்றவேண்டும் என்று நம்முடைய அரசு நிர்ணயித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி, பொதுத் துறையைக் கலந்தாலோசித்து, இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட பின்னர்தான் இத்திட்டம் குறித்த விவரங்களை எடுத்துச்சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 93, 94, 95, 96 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள்

* 97 **வினா—திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒன்றியத்தால் நடத்தப்படும் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆண்டிப்பட்டி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க, 1973-74-ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஏற்படுகிற தாமதம் விரைவில் நீக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய இந்த மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக எடுத்துக் கொள்ள ஊராட்சி ஒன்றியத்தில் அதற்கு ஈட்டுப்பணம் கொடுக்கத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதை விரைவில் அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒவ்வொரு மருந்தகத்தையும் அரசு எடுத்துக்கொள்ளுகிறபோது, அந்த மருந்தகம் அடிப்படை வசதிகளைப் பெற்றுள்ளதாக இருக்கவேண்டும். நடைமுறையில் ஏற்படுகிற செலவைத்தான் அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்காக அங்கங்கே பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் ஒன்றியத்திலிருந்து தரவேண்டும் என்று கேட்கப்படுகிறது. அந்த நிதி கொடுத்தவுடன்